# பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை :- திருமதி.எம்.ஆர்.வசந்தி, எம்.ஏ.,

ந.க. எண்.548/2020/எச்1 நாள்.25.03.2020.

பொருள் :- பொதுசுகாதாரம் – திருவள்ளூர் மாவட்டம் – பூவிருந்தவல்லி நகராட்சி – நகராட்சி பகுதிகளில் கொரோனா (Covid-19) தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் – வார்டு அளவில் குழு அமைத்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :-

1) அரசாணை (நிலை) எண்.347, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ப்பி1)துறை, நாள்.16.03.2020.
2) திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ந.க. எண்.012/2019/அ7/உ.இ(ஊ), நாள்.24.3.2020.
3) கொரோனா வைரஸ் பராவாமல் தடுக்க தமிழக அரசால் 24.03.2020 மாலை 6.00 மணி முதல் குற்றவியல் நடைமுறை சட்ட பிரிவு 144–ன் கீழ் ஊரடங்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
4) தொற்று நோய்கள் சட்டம் 1897 பிரிவு 2–ன்படி, மாவட்ட எல்லைகள் மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

-----

உத்திரவு :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக 24.03.2020 மாலை 6.00 மணி முதல் 01.04.2020 வரை குற்றவியல் நடைமுறை சட்ட பிரிவு 144–ன்கீழ் ஊரடங்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய்கள் சட்டம் 1897 பிரிவு 2–ன்படி, மாவட்ட எல்லைகள் மூட உத்திரவிடப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்களான பால், காய்கறி, மளிகை, இறைச்சி மற்றும் மீன் ஆகிய அத்தியாவசிய கடைகளுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நடைமுறை சட்டம் 144ன்கீழ் தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 37 (1) (2) (3) மற்றும் (4) ன் கீழ் பேரிடர் தருணத்தில் ஆற்ற வேண்டிய தலையாய கடைகளான முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கள் மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ள பார்வையில் உள்ள திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் செயல்முறைகளில் உத்தரவிடப்பட்டவாறு, பூவிருந்தவல்லி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரானோ தொற்றுநோய் முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகள் மற்றும் இணைப்பு படிவத்தில் குறிப்பிடப்பட்டவாறு, பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு வார்டு அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு இதன் வாயிலாக உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் திரு/திருமதி/செல்வி | பதவி | கைபேசி எண் | வார்டு எண் | கண்காணிப்பாளர் | முதல்நிலை அலுவலர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஹரிகிருஷ்ணன் | இளநிலை உதவியாளர் | 9842542579 | 1 முதல் 3 வரை | எம்.வெங்கடேசன் துப்புரவு ஆய்வர் 8754578106 | எம்.ஆர். வசந்தி, ஆணையர் 7397382205 |
| 2. | திருப்பதி வெங்கடேசன் | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 8754578132 | | | |
| 3. | ஜெயப்பிரதா | பரப்புரையாளர் | 9087231574 | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | பிரபு | இளநிலை உதவியாளர் | 9176314665 | 4 முதல் 6 வரை | ஜ.முபாரக்பாஷ் மேலாளர் 9442282555 | எம்.ஆர். வசந்தி, ஆணையர் 7397382205 |
| 5 | முருகதாஸ் | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 7373803735 | | | |
| 6 | காயத்திரி | பரப்புரையாளர் | 8248653466 | | | |
| 7 | வி. ஜெயவேல் | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 8454578119 | 7 முதல் 9 வரை | ரவி கணக்கர் 9444329057 | எம்.ஆர். வசந்தி, ஆணையர் 7397382205 |
| 8 | வசந்த்தகுமார் | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 8778632964 | | | |
| 9 | சுஹாசினி | பரப்புரையாளர் | 9962596732 | | | |
| 10 | வேணுகோபால் | வருவாய் உதவியாளர் | 9566915048 | 10 முதல் 12 வரை | லட்சுமிநாராயணன் நகரமைப்பு ஆய்வர் 9710013739 | எம்.ஆர். வசந்தி, ஆணையர் 7397382205 |
| 11 | எஸ்.ஆறுமுகம் | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 8754578121 | | | |
| 12 | ரம்யாஸ்ரீ | பரப்புரையாளர் | 9952058023 | | | |
| 13 | வி.மணிமாறன் | பதிவறை எழுத்தர் | 8754578116 | 13 முதல் 15 வரை | விஜயகுமாரி 7395848652 | எம்.ஆர். வசந்தி, ஆணையர் 7397382205 |
| 14 | கோவர்த்தனன் | SBM மேற்பார்வையாளர் | 9940512168 | | | |
| 15 | பாபு | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 9514253701 | | | |
| 16 | எம்.பன்னீர்செல்வம் | எச்1 | 9677191978 | 16 முதல் 18 வரை | ரவிச்சந்திரன் ஓவர்சீர் 9884415180 | எம்.ஆர். வசந்தி, ஆணையர் 7397382205 |
| 17 | நாகப்பூஷணம் & அகிலன் | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 8754578117 7358411007 | | | |
| 18 | பாலமுருகன் | பொருத்துநர் | 8754578125 | | | |
| 19 | ரவி | வருவாய் உதவியாளர் | 9841909896 | 19 முதல் 21 வரை | கலையரசு பணி ஆய்வர் 8754578133 | எம்.ஆர். வசந்தி, ஆணையர் 7397382205 |
| 20 | இளையராஜா | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 7094468020 | | | |
| 21 | ஜெயக்குமார் | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 9884778989 | | | |

1) நகராட்சி பகுதிகளில் 144 தடை உத்தரவு அரசால் பிறப்பிக்கப்பட்டு இருப்பதையும் இதன் நோக்கம் குறித்தும் பொதுமக்களக்கு தண்டோரா மற்றும் ஆட்டோவின் மூலம் உடனடியாக விளம்பரபடுத்த வேண்டும்.

2) பொதுமக்கள் கூட்டமாக கூடுவதையும் பொது இடங்களில் சந்திப்பதையும் முற்றிலும் தடை செய்ய வேண்டும். மிக அத்தியாவசியமான நிகழ்விற்கு 2 மீட்டர் தொலைவில் நின்று பேசி கொள்ள அறிவுறுத்த வேண்டும்.

3) பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியேறுவதை தவிர்க்க அறிவுறுத்த வேண்டும்.

4) உடல்நிலை சரியில்லாத மற்ற அவசர நிலையில் வீட்டை விட்டு வெளியேற விரும்பினால் நகராட்சி ஏற்படுத்தியுள்ள குழு உறுப்பினர்களுக்கு தகவல் அளித்து அருகில் இருக்கும் மருத்துவ ஊழியர்களுடன் வெளியேற அறிவுறுத்த வேண்டும்.

5) நகராட்சி எல்லைக்குள் வேறு பகுதிகளிலிருந்து வாகனங்கள், பொதுமக்கள் வருவதை முற்றிலும் தடை செய்ய வேண்டும். அத்தியாவசிய பொருட்களான வாகனங்கள் மற்றும் மருத்துவமனைக்கு செல்லும் வாகனங்கள் மட்டும் அனுமதிக்கலாம்.

6) நகராட்சிக்குள் வசிக்கும் மக்கள் வீட்டை விட்டு வெளியேறாமல் இருக்கவும், மற்ற பகுதியிலிருந்து இப்பகுதிக்கு வராமல் தடுக்க வேண்டும்.

7) நகராட்சியிலிருந்து மக்கள் அவசியமில்லாமல் வெயில் செல்வதையும், மற்ற பகுதிகளிலிருந்து நகராட்சிக்குள் அனுமதிப்பதையும் முற்றிலும் தடை செய்ய வேண்டும். எனினும் அத்தியாவசிய தேவைக்கு வரும் நபர்களை பரிசோதித்து அனுமதிக்கலாம்.

8) மக்கள் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்காமல் அவர்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்க நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்களின் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

9) நகராட்சியின் அனைத்து பொது இடங்கள், வணிக வளாகங்கள், திரையரங்குகள் அரசு மற்றும் உள்ளாட்சி கட்டடங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் வளாகங்கள் தினமும் முழுமையாக தூய்மை செய்து கிருமி நாசினி தெளிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

10) பொதுசுகாதாரம் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் நகராட்சியின் கையிருப்பில் எப்போதும் போதிய அளவு இருப்பதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும்.

11) பொதுமக்கள் தங்கள் குடியிருப்புகளை சுற்றி தூய்மையாகவும் கிருமி நாசினி பொருட்கள் தெளித்து சுத்தமாக வைத்திருக்கவும் அவ்வப்போது சோப்பு போட்டு கைகளை சுத்தம் செய்து கொள்ளவும் அறிவுறுத்த வேண்டும்.

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பணிகளையும் செவ்வனே பணி புரிந்திடவும், மேற்படி பணிகளில் எவ்வித தொய்வின்றியும், பணிகளில் சுணக்கம் கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட பணியாளர் மற்றும் அலுவலர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

25/03/2020

ஆணையர்,
பூவிருந்தவல்லி நகராட்சி

25/3/2020 24/03/2020

<u>பெறுநர்</u>

சம்மந்தப்பட்ட பணியாளர்கள்,
பூவிருந்தவல்லி நகராட்சி.

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது :-</u>

1) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28.
2) மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர்.
3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம்.